# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 21 | March மார்ச் | 2021

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


# நம் அறிவுக்கு எட்டாத பெரியவனவற்றைச் செய்கின்றார்.

யோபு 37:5


கௌரவ ஆசிரியர் BETTY CHOATE ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 9 |
| சிறுவர் பகுதி | 11 |


*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**


ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th., M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. ஜெயாசீலன் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

ஞாயிறு மதியம் 3:30 மணி

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 7:00 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)


**OUR ENGLISH TV PROGRAM**


**SALVATION TV**

Every Sundays 2pm

Speakers:

Jerry Bates & Kingsly Rajah





WORLD VEDIO BIBLE SCHOOL ENGLISH BOOKS NOW AVAILABLE IN INDIA

INTERNATIONAL EDITION - "USA PRINTING"

**கிருபையுள்ள வார்த்தை**

சர்வவல்ல பிதாவின் வல்லமையை
பறைசாற்றும் சத்திய வார்த்தை


**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International Vol. 103

# வேதாகம கடவுளும் அற்புதமும்

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள். இந்த மாதம் வேதாகம அற்புதங்களை குறித்து உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.**

## வேதாகம கடவுளும் அற்புதமும்

பைபிள் கடவுள் என்பவர், ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களை செய்கிறவர் **(யோபு 9:10),** மனிதர்களால் கிரகிக்ககூடாத பெரிய காரியங்களை செய்கிறவர் **(யோபு 37:5),** அவரால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை **(எரே 32:17),** அவரால் எல்லாம் கூடும் **(லூக்கா 1:37),** அவர் சர்வவல்லவர் **(ஆதி17:1),** அவர் செய்ய நினைத்தது தடைபடாது **(யோபு 42:2)** என்பது நாம் அறிந்ததே.

ஏறக்குறைய 160 அற்புதங்கள் பைபிளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சர்வவல்லமையுள்ள கடவுள் நேரடியாகவோ, அல்லது தன் அடியவர்கள் மூலமாகவோ அல்லது தனது குமாரன் மூலமாய் இந்த அற்புதங்களை செய்தார் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படி பதிவு செய்யப்பட்டுள்ள அற்புதங்களில் கிறிஸ்துவிற்கு முன் ஏறக்குறைய 4000 ஆண்டுகளாக செய்யப்பட்டவைகளைவிட, கிறிஸ்துவின் பிறப்பிற்கு பின் ஏறக்குறைய 40 ஆண்டுகளில் செய்யபட்டவைகள், அதாவது பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டவைகளைவிட, புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டவைகள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றது. மேலும், அவைகளே மிகவும் பிரபல்யமாகவும், பிரதானமாக மக்கள் மத்தியில் தற்போது பேசப்படுகின்றவைகளாகவும் இருக்கின்றன. என்பது குறிப்பிடத்தக்கது. அற்புதங்களை கடவுள் ஏன் செய்தார் என்பதையும் மற்றும் அவைகள் ஏன் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதற்கான காரணத்தினையும் பைபிளிலிருந்தே நாம் அறிந்துக்கொள்ள முடியும்.

பைபிளில் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்புதங்கள் மாத்திரமல்ல, அவைகளில் பதிவு செய்யப்படாத அற்புதங்களை கடவுள் செய்திருக்கின்றார். **யோவான் 20:30** "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்." ஆகிலும் அவைகள் என்னவென்று ஆராய்வது நம் வேலையல்ல, காரணம் மறைவானவைகள் அவருக்கே உரியவைகள் , ஆயினும் வெளிப்படுத்தப்பட்டவைகள் நமக்கானதாக இருக்கின்றபடியால், அப்படி வெளிப்படுத்தப்பட்ட அற்புதங்களிலிருந்து, கர்த்தர் நமக்கு சொல்லிக்கொடுக்கும் பாடங்களை கற்றுக்கொண்டு, கடைப்பிடிப்பதே சாலச்சிறந்ததாகும். **உபாகமம் 29:29** "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றைக்கும் உரியவைகள்."

## சர்வ வல்ல கடவுள் இருக்கின்றார்

**யாத்திராகமம் 5:1–2** "பின்பு, மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில் போய்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என் ஜனங்களைப் போகவிடவேண்டும் என்று சொல்லுகிறார் என்றார்கள். அதற்குப் பார்வோன்: நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை என்றான்."

எகிப்திய பேரரசன் பார்வோன், நான் தான் கடவுள் அது யாரு கர்த்தர் என்று புது கடவுள் என மேட்டிமையாக பேசுகின்றான். பைபிள் கடவுள், நம் கண்களுக்கும் அறிவிற்கும் புலப்படுகின்ற மற்றும் புலப்படாத இந்த அண்டசராசரங்கள் அனைத்தையும் படைத்தவராகவும் மற்றும் அவைகள் எல்லாவற்றையும் ஆளுகிறவராகவும் இருக்கின்றார். ஆயினும் அநேக நேரங்களில் மனிதர்கள் கடவுளையும் அவரது வல்லமையையும் மறந்துவிடுகிறார்கள். அதனை கடவுள் வன்மையாக கண்டிக்கின்றார். **ஏசாயா 51:12** "நான்,

நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?"

இங்கே இப்படிபட்ட காரியம் நடக்கும்போது, கர்த்தர் தனது இருப்பையும் தன் வல்லமையையும் தன் ஆளுமையையும் மற்றும் அதிகாரத்தினையும் மனுக்குலத்திற்கு புரிய வைக்க அற்புதங்களை தண்டனை வடிவில் நிகழ்த்துகிறார். அதனை யாத்திராகமம் புத்தகத்தில் நாம் படித்து நன்கு அறிய முடிகின்றது. **யாத் 7:18** "நதியில் இருக்கிற மீன்கள் செத்து, நதி நாறிப்போம்; அப்பொழுது நதியில் இருக்கிற தண்ணீரை எகிப்தியர் குடிக்கக்கூடாமல் அரோசிப்பார்கள்; இதினால் நானே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்."

பார்வோன் மற்றும் எகிப்தியர்கள் போன்று அநேகர் செயல்பட்டனர். அப்பொழுதெல்லாம் கர்த்தர் அற்புதங்களை தண்டனை வடிவில் நிகழ்த்தினார். அதனை நாம் வேதாகமம் நெடுக வாசித்து அறிய முடியும். இன்றைய நாட்களிலும் நாம் இவர்களை போன்ற மனிதர்களை பார்க்கலாம். அவர்கள் தாங்கள் தான் கடவுள் போலவும் எண்ணிக்கொண்டும், கடவுளை மறுதலித்து மோசமான செயல்களிலும் ஈடுபடலாம். அப்படிப்பட்டவர்களை எல்லாம் பைபிள் கடுமையாக எச்சரிக்கின்றது. நிச்சயமாகவே அவர்கள் எகிப்தியர்களை போல, இறை தண்டனையிலிருந்து தப்பிக்கவும் முடியாது மற்றும் போக்கு சொல்லவும் முடியாது. **ரோமர். 1:18-20** "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை."

## கர்த்தராகிய இயேசு கடவுளுடைய குமாரன்

**யோவான் 20:30-31** "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது."

ஆண்டவர் இயேசு இந்த பூமியில் மானிடனாக பிறந்து வந்ததின் காரணத்தை பற்றி சொல்கையில், இழந்து போனதை தேட மற்றும் இரட்சிக்கவும் வந்தேன் என்றார் **(லூக்கா 19:10)**, பாவிகளை இரட்சிக்க வந்தார் **(1தீமோ 1:15)**, நியாயப்பிரமாணத்தை, தீர்க்கத்தரிசினத்தை நிறைவேற்ற வந்தேன் என்றார் **(மத் 5:17)**, நம்முடைய பாவங்களிற்காக பலியாக வந்தேன் என்றார் **(யோவா 18:11, மத் 26:45)**. ஒன்றை நாம் கவனிக்க வேண்டும், அற்புதம் செய்யும்படியாக தான் வந்ததாக ஆண்டவர் அறிவிக்கவில்லை. ஆயினும் இந்த பூமியில் இருந்த நாட்களில் அவர் அற்புதங்களை செய்தார். யூதர்கள் மத்தியில் செய்த அற்புதங்களை அவர்களை ஒருவருக்கும் அறிவிக்க வேண்டாம் என்றார். காரணம் அவர்கள் அவரை இந்த பூமிக்குரிய வகையில் ராஜாவாக்க முயற்சிப்பர்.

புற தேசத்தார் மத்தியில் செய்த அற்புதங்களை அவர்களை மற்றவர்களுக்கு அறிவிக்க சொன்னார். அற்புதம் செய்து ஆண்டவர் தான் யார் என்பதை நிருபிக்க விரும்பாவிடினும், அவர் செய்த அற்புதங்கள் அவர் இயற்கையின் மீதும், வியாதிகளின் மீதும், பிசாசின் மீதும், மரணத்தின் மீதும், பாவங்கள் மற்றும் சாபங்கள் மீதும் அதிகாரம் உடைய கடவுளின் குமாரன் என்பதை வெளிப்படுத்தின. யோவான் அந்த விசுவாசத்தை நாம் பெறவே பதிவும் செய்யப்பட்டுள்ளன என்கிறார். **(யோவா 20:30-31)**.

ஆண்டவர் செய்த அற்புதங்கள் ஏராளமாயினும் எல்லாம் பதிவு செய்யப்படவில்லை, ஏறக்குறைய 40 அற்புதங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. பைபிள் அவர் செய்தவைகளை எழுதி வைத்தால், நூலகம், பட்டணம், தேசங்கள் அல்ல உலகமே பத்தாது என்கிறது. **யோவான் 21:25** "இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்."

நாம் ஆண்டவர் இயேசுவை கடவுளுடைய

குமாரன் என விசுவாசிக்க ஆதாரமாக போதுமான அற்புதங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர் கடவுளுடைய மகன் என்பதை விசுவாசிப்போம் மற்றவர்களுக்கும் உரத்த குரலில் அறிவிப்போம். மனிதர்கள் முன்பாக அவரை அறிக்கை செய்வதிலிருந்து தவறிவிட வேண்டாம். **மத்தேயு 10:32–33** "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்."

அந்த கடவுளுடைய குமாரனாகிய கர்த்தர் இயேசு நமது பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணபட்டார், உயிர்தெழுந்தார் மற்றும் சதா காலமும் உயிரோடிருக்கிறார் என்று ஒரு நாளைக்கு ஒருத்தருக்காவது அவரைப் பற்றி அறிவிப்போம். ஏனெனில் அது நம்மேல் விழுந்த கடமை **1கொரி 9:16** "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்ததும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ."

## கர்த்தருடைய வார்த்தையே உறுதியானது மற்றும் இறுதியானது

**மாற்கு 16:17–20** "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்."

அற்புதங்கள் செய்யபட்டதின் நோக்கத்தினை பற்றி படிக்கையில், பரிசுத்த ஆவியானவர் தருகின்ற மற்றொரு பதில், அப்போஸ்தலர்கள் உபதேசிக்கின்ற வேத வசனங்கள், கர்த்தருடையவைகள் தான் என்பதை உறுதிப்படுத்தவும், கர்த்தராகிய கிறிஸ்துவின் உபதேசமே இறுதியானது என்பதை வெளிப்படுத்தவும் அற்புதங்கள் செய்யப்பட்டன என்கிறார்.

மேலும், கர்த்தருடைய உபதேசத்தில் நிலைத்திராமல் வழிவிலகுதல் என்பது கடவுளுடைய தண்டனைக்கு நம்மை உட்படுத்தும், ஆகையால் கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திருங்கள் என்கிறார் **எபி 2:1–4** "ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்."

வேத வசனங்கள் ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ **(வெளி 22:19–20)**, நம் வசதிக்கு ஏற்ப மாற்றவோ முடியாது **(2தீமோ 4:3)**. நாம் கர்த்தரிலும், கர்த்தருடைய வார்த்தை நம்மிலும் நிலைத்திருப்பதே நம்மை கனியுள்ளவர்களாகவும், கர்த்தருக்கு உகந்தவர்களாகவும் மாற்றும். **யோவான் 15–5–7** "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என்வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."

ஆகையால், இனி புதிய வெளிப்பாடு ஒன்று வரப்போவதில்லை, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே கடவுளின் இறுதி வெளிப்பாடு என்பதை நினைவில்கொண்டு **(எபி 1:12)**. நூதனமாக கள்ளபோதனைகளுக்கும், கள்ளபோதகர்களுக்கும் நம்மை நாமே விலக்கி காப்போம் **(2யோவான் 7–11)**.

இறுதியாக, பிரியமானவர்களே வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள அற்புதங்கள் ஏன் செய்யப்பட்டன என்பதையும், ஏன் அவைகள் பதிவு செய்யப்பட்டன என்பதையும் நாம் பரிசுத்த ஆவியானவரின் துணைக்கொண்டு, பரிசுத்த வேதாகமத்தின் வெளிச்சத்திலே அறிந்தோம். நமது விசுவாசம் அற்புதங்களினாலே அல்ல, அவருடைய வார்த்தையினாலே வர வேண்டும் **(ரோ 10:17)**, வளர வேண்டும் **(யோவா 4:42)** மற்றும் பெருகவும் வேண்டும் **(எபி 4:12, எபி 2:1–4)**. அற்புதங்களை கண்டு தன்னை விசுவாசித்தவர்களையும், பின்பற்றினவர்களையும் ஆண்டவர் ஊக்கப்படுத்தவில்லை **(யோவா 4:48, யோவா 12:37)**. அது கர்த்தரை பிதாவின் சித்தப்படி பின்பற்றுவதற்கான அடையாளம் அல்ல **(மத் 7:21–23)**, கள்ள போதகர்கள் மற்றும் கள்ள கிறிஸ்துக்களால் அற்புதங்களை செய்ய முடியும் என்று ஆண்டவர் சொன்னார் **(மத் 24:24)**.

அன்பானவர்களே, கர்த்தருடைய கை குறுகி போகவில்லை **(ஏசா 59:1)** நாம் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் அதிகமாக செய்ய அவர் வல்லவர் **(எபே 3:20)**, மேலும் அவர் என்றும் மாறாதவர் **(மல் 3:6)**. ஆகையால் ஆண்டவர் நம் வாழ்வில் அற்புதம் செய்யும்படியாக அல்ல, அவருடைய வார்த்தையின் பேரில் விசுவாசம் கொண்டு, வாக்குத்தத்தம் செய்தவர் (வாக்குறுதி அளித்தவர்) உண்மையுள்ளவர் என ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தையின் மீது விசுவாசம் கொண்டு அவரை பின்பற்றி வாழ்ந்தது போல, நாமும் வாழ்ந்து **(ரோமர் 4:21,22)**, நற்சாட்சியுள்ளவர்களாய் மிகுந்த கனிகளை தந்து, பரலோக பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்துவோம் **யோவான் 15:8** "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்."

## சிறுவர்க்கான கேள்விகள்

1. ஆண்டவர் இயேசு வசனம் போதிக்க பேதுரு எதை கொடுத்தார்?
2. ஆண்டவர் இயேசு அழைத்தவுடன் பேதுரு என்ன செய்தார்?
3. அப்போஸ்தலர்களால் ஏன் அசுத்த ஆவியை துரத்த முடியவில்லை?
4. 200 பணம் பத்தாது என ஆண்டவரிடம் சொன்னது யார்?
5. மீதியான உணவுகளை எத்தனை கூடைய நிறைய எடுத்தனர்?

## வாசகர்கள் கவனத்திற்கு!

தடையில்லாமல் உங்கள் கிருபையுள்ள வார்த்தை இதழை தொடர்ந்து பெறுவதற்கு, உடனே உங்கள் பெயர். இதழ் எண்ணுடன் **"மொபைல்"** எண்ணை எங்களுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பெயர் : ................................ பதிவு எண் : ................................ மொபைல் : ................................

**மேலே குறிப்பிடபட்ட உங்கள் விபரங்களை குறுஞ்செய்தியாகவோ வாட்ஸ்அப் மூலமாகவோ அனுப்பவேண்டிய எண்கள்**

**92 4421 4421, 92 4431 4431**

**விபரங்களை தபாலில் அனுப்புவதற்கு**

**கிருபையுள்ள வார்த்தை, தபால் பெட்டி எண் : 15**

**அரசரடி, மதுரை – 625 016.**

# பெரும்பாடுள்ள பெண்

சகோதரி : பேபி ராஜா



அன்பான சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள். இந்த முறை ஆண்டவர் இயேசு செய்த ஒரு அற்புதத்தை உங்களுடன் பகிர்ந்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாற்கு 5ம் அதிகாரத்தில் பெரும்பாடுள்ள பெண் பெற்றுக்கொண்ட அற்புத சுகத்தினை பற்றி நாம் நன்கு அறிவோம். அந்த அற்புதம் வாயிலாக பைபிள் நமக்கு சொல்கின்ற பாடம் என்ன என்பதை பற்றி அறிந்துக் கொள்வோம்.

## 1. மிகுந்த வேதனையுள்ள பெண்

**மாற்கு 5:25-26** "அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது,"

முதலாவது. இந்த பெண் மிகுந்த வேதனை நிறைந்த பெண்ணாக இருக்கின்றாள். உதிர போக்கு என்பது பெண்களுக்கு மாதாந்திர சூழற்சி தான். ஆயினும் அது அதிக நாள் நீடிப்பது என்பது எப்படிப்பட்ட பயத்தையும், சோர்வையும், வேதனையையும் உண்டாக்கும் என்பது நாம் அறிந்ததே. 12 ஆண்டு காலம் என்பது மிகவும் கொடுமையான ஒன்றாகும். 12 ஆண்டுகளுக்கு முன்பு அவள் அழகாக, புஷ்டியாக இருந்திருக்கலாம், ஆனால், இப்போது அநேகமாக அவள் உடல் மெலிந்து எலும்பும் தோலுமாக அவள் தோற்றம் அவளுக்கே பிடிக்காத ஒரு நிலை தான் இருந்திருக்க கூடும்.

அவள் வேதனை எவ்வளவு கொடிதானதாக இருந்தால், அதற்காக தன் ஆஸ்தி முழுவதையும் அழித்திருப்பாள். அந்த சுற்று வட்டாரத்தில் அநேகமாக அவர் பார்க்காத வைத்தியரும், முயற்சிக்காத மருத்துவமும் இருந்திருக்காது என்றே நம்புகிறேன். எவ்வளவோ பிராசயப்பட்டும் குணமாகவில்லை என்ற அவளது வேதனையை எளிதாக விவரிக்க முடியவில்லை. ஆயினும் சுருக்கமாக சொன்னால் அது மகா கொடுமையானது. அது அவளை மனதளவிலும், உடலளவிலும் மிகவும் பாதித்திருக்கும் என்று நாம் அறிய முடியும்.

## 2. மிகுந்த தைரியமுள்ள பெண்

**மாற்கு 5:25-26** "அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது,

இரண்டாவதாக, இந்த பெண் மிகுந்த தைரியமுள்ள பெண்மணியாக நாம் அறிய முடிகின்றது. 12 ஆண்டுகளாக ஒரு நோயை எதிர்த்து பல்வேறுபட்ட வகையில் அவள் போராடினதிலிருந்து, அவளுக்குள் இருந்த மன தைரியத்தை நாம் அறிந்துக்கொள்ளலாம். தன் உடலில் நாற்றம், சோர்வு, வலி மற்றும் மற்றவர்களின் ஏளன பேச்சு இவைகளை குறித்து தளர்ந்து போகாமல் அவள் தைரியமாக எதிர்த்து நின்றிருக்கிறாள் என்பது பாராட்டப்பட வேண்டியதே. நாமாக இருந்தால் சோர்ந்து போயிருப்போம் மற்றும் தவறான முடிகளை (இனி நான் பைபிள் படிக்க மாட்டேன், சபைக்கு செல்ல மாட்டேன் என) எடுத்திருக்ககூட வாய்ப்பு உண்டு. அவசர உலகத்தில் அநேகரிடத்தில் பொறுமை நிதானம் என்பது வார்த்தையில் மட்டுமே உண்டு, வாழ்க்கையில் இருப்பதில்லை.

## 3. மிகுந்த விசுவாசமுள்ள பெண்

**மாற்கு 5:27-28** "இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி; ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்."

அடுத்தாக, அவளிடமிருந்து நாம் அறிவது அவள் மிகுந்த விசுவாசமுள்ள பெண்ணாக இருக்கின்றாள். ஆண்டவரை பற்றி அறிந்த உடனே அதை விசுவாசிக்கின்றாள். ஆண்டவருடைய உடையின் நுனியை தொட்டால்கூட நான்

சுகமாகிவிடுவேன் என விசுவாசித்தாள். கூட்ட நெரிசல் ஆண்டவரிடம் அருகில் சேர முடியவில்லை. ஆயினும் விடவில்லை ஏனெனில் ஆண்டவரால் மாத்திரமே தன்னை காப்பாற்ற முடியும் என்று அவள் விசுவாசித்தாள். அதனால் தான் அந்த நெருக்கமான ஜனக்கூட்டத்திற்குள் நுழைத்து, அவருடைய உடையின் ஓரத்தை தொட்டாள். அதனால் சுகமும் பெற்றாள்.

### 4. மிகுதியாக பாராட்டும், சுகமும் பெற்ற பெண்


**மாற்கு 5:29–34** "உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார். அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள். இதைச் செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார். தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையெல்லாம் அவருக்குச் சொன்னாள். அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்."

12 ஆண்டுகளாக தன்னை அடிமைப்படுத்தின நோயிலிருந்து விடுதலை பெற்றாள். அவளது வேதனை எல்லாம் நீக்கப்பட்டது. அவ்வளவு பேர் ஆண்டவரை நெருக்கினார்கள். இவளோ விசுவாசத்தினால், ஆண்டவரை நெருங்கினாள். அதனால் சமாதானம், விடுதலை, ஆரோக்கியம் பெற்றாள். அந்த ஜனக்கூட்டத்தின் நடுவில் அவளது விசுவாசத்தினால், ஆண்டவரிடமிருந்து மிகுந்த பாராட்டும் பெற்றாள். நாமும் ஆண்டவரை விசுவாசத்துடன் கிட்டிச்சேர்வோம். அவர் நம்மை அவருடைய சித்தப்படியே ஆத்தும மற்றும் சரீர நோயிலிருந்து குணப்படுத்துவாராக. **(1யோவா 5:14,15).**

பொதுவான செய்திகள்

## கா.ந. அண்ணாத்துரை

காஞ்சீவரம் நடராசன் அண்ணாதுரை



**தொடர்ச்சி**

### பெரியார் உடனான தொடர்புகள்

அதன்பின் பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, நீதிக் கட்சியில் சேர்ந்தார். பின்னர் பெரியாருடன் திராவிடக் கழகத்தில் இணைந்து மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பகுத்தறிவுக் கருத்துக்களையும், சமூக சீர்திருத்த கருத்துக்களையும் பரப்புவதில் முன்னின்று ஈடுபட்டார். பெரியாரின் தனித்திராவிட நாடுக் கொள்கையின் காரணமாகவும், தன்னைவிட வயதில் இளையவரான மணியம்மையாரை பெரியார் மணம் புரிந்து கொண்டமையினால் கருத்துவேறுபாடு கொண்டு, திராவிடக் கழகத்தின் முக்கிய உறுப்பினர் பலருடன் 1949ல் பெரியாரை விட்டு விலகி, திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) என்ற புதிய இயக்கமொன்றை நிறுவினார். தனிக்கட்சி துவங்கினாலும் தன் கட்சி கொள்கைகள் தாய்க்கட்சியான திராவிடக்கட்சியை ஒத்தே செயல்பட்டது. இந்தியாவின் தேசிய அரசியலில் பங்குகொள்ளும் விதமாக இந்தியக் குடியரசானதிற்கு பின் இந்திய சீனப் போருக்குபின் 1963இல் தனது தனித்திராவிட நாடு கொள்கையை கைவிட்டார்.

ஆளும் காங்கிரசு கட்சிக்கெதிராக பல்வேறு போராட்டங்களில் பல்வேறு காலகட்டங்களில் ஈடுபட்டு அவ்வாட்சியை எதிர்க்கலானார். இறுதியில் 1965 இல் இந்தி எதிர்ப்பு போராட்டங்களிலும் மிகத்தீவீரமாக ஈடுபடலானார். இந்தி எதிர்பு போராட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதன் விளைவாக மக்களாதரவை அவரும் அவரது கட்சியான திராவிட முன்னேற்றக் கட்சியும் அபரிமிதமாக பெற்றன.

# ஆண்டவர் செய்த 2ம் அற்புதம்

வாலிபர் பகுதி
E. ஜோசப்பிரதீப்

அன்பான வாலிப தம்பி தங்கைகளுக்கு, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து செய்த 2வது அற்புதத்தை குறித்து தியானம் செய்வோம்.

யோவான் 4ம் அதிகாரத்தில் இந்த அற்புதம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ராஜாவின் மனுசரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான், அவனை ஆண்டவர் இயேசு குணமாக்கினார் என்பதே அந்த அற்புதம். ராஜாவின் மனுசர் என்று சொல்லப்படுவதினால். ஒருவேளை அவன் பிரபுவாக (மந்திரி போன்று) இருக்க வாய்ப்பிருக்கின்றது. அல்லது ராஜாவிற்கு உறவினராக கூட இருந்திருக்கலாம்.

ஆண்டவர் இயேசு கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு வந்திருந்தார். ஆனால் நோயாளி கப்பர்நகூமிலே இருந்தான். ஆண்டவர் வந்த செய்தி அறிந்த மகனுடைய தந்தை. ஆண்டவரை பார்க்க கப்பர்நகூமிலிருந்து கானா ஊருக்கு வந்தார். அவனுடைய தந்தை ராஜாவின் மனுசர் என்பதால், வசதிக்கோ, மருத்துவத்திற்கோ குறைவு இருந்திருக்க வாய்ப்பில்லை. அநேக மருந்துவர்களை பார்த்திருக்கவும். வாய்ப்புகள் அதிகம் பார்த்து குணமாகாதிருக்கலாம். இப்பொழுது அந்த பையனுடைய நிலை மரணப்படுக்கை என்று சொல்லப்பட்டதிலிருந்தது. அவனுடைய அப்பா ஆண்டவரை பற்றி கேள்விப்பட்டு, தனது மகனை காப்பாற்ற கடைசி நம்பிக்கையான ஆண்டவரை பார்க்க வந்திருக்கலாம்.

அவன் ஆண்டவரிடத்திற்கு வந்து, ஆண்டவரே, "என் மகன் மரண அவதிபட்டுக் கொண்டிருக்கின்றான். அவனை வந்து காப்பாற்றுங்கள் என்று வேண்டி கூப்பிட்டான். ஆண்டவரோ நீங்கள் அற்புதங்களையும், அடையாளங்களையும்க ணாவிட்டால்வி சுவாசிக்க ம ாட்டீர்கள் என்றார். அவனோ, ஆண்டவரே என் பிள்ளை சாகிறதற்குள்ளே வாருங்கள் என்று கூப்பிட்டான். ஆண்டவரோ! 'நீ போ உன் மகன் பிழைத்திருக்கிறான்' என்று சொன்னார். அந்த மனிதன் அந்த வார்த்தையை நம்பி போனான். அவன் போகும் வழியிலே அவனுடைய வேலைக்காரர்கள், அவனுக்கு எதிர்கொண்டு வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று சொன்னார்கள். அவன் எப்பொழுது சுகமானான் என்று கேட்டான். நேற்று 7 மணிக்கு என்று சொன்னார்கள். அந்த மனிதன் ஆண்டவர் தன்னிடம் சொன்ன மணிநேரம் அதுவே என்று அறிந்து, அவனும் அவனுடைய குடும்பத்தாரும் ஆண்டவரை விசுவாசித்தார்கள்." இந்த அற்புதம் நம்முடைய வாழ்விலும் மிகப்பெரிய பாடத்தினை கற்றுத்தருகின்றது.

## 1. அந்த மனிதன் ஆண்டவரை பற்றி அறிந்திருந்தான் (வசனம் 46–48)

அந்த மனிதன் ஏறக்குறைய 30 கிலோமீட்டர் பயணம் செய்து, தன் மகனுக்காக இயேசுவிடம் வந்தான். அவன் இயேசு விசேஷமானவர் என்று அறிந்திருந்தான். ஆகையால் தான் இயேசுவினால் தன் மகனை காப்பாற்ற முடியும் என விசுவாசித்து அவரிடம் வர முடிந்தது. பரலோக கடவுளை பற்றிய சரியான அறிவே நம்மை அவரிடம் நெருங்கி சேர உதவும். ஆகையால் வாலிப தம்பி, தங்கைகளே நிறைய நேரம் பைபிளை படிக்கவும். தியானிக்கவும் மற்றும் ஆராயவும் செலவிடுங்கள். அது ஆசீர்வாதமானது, **சங்கீதம் 1:1–3** "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்."

**2. அந்த மனிதன் ஆண்டவரின் வார்த்தையை விசுவாசித்தான் (வசனம் 49–53)**

அந்த மனிதன் இயேசுவை தன் வீட்டுக்கு வந்து பிள்ளையை சுகப்படுத்தும்படி வேண்டினான். அவனுடைய விருப்பமும் அதுவாக தான் இருந்தது. ஆனால், ஆண்டவர் இயேசு அவனுடைய விசுவாசத்தை அற்புதத்தினாலே அல்ல வார்த்தையினாலே நிலைநிறுத்தும்படியாக 'நீ போ உன் மகன் பிழைத்திருக்கிறான்' என்று சொன்னார். அந்த மனிதன் அந்த வார்த்தையை நம்பி, சந்தேகமின்றி போனான். தன் மகனுடைய சுகத்தையும், கடவுளுடைய செயலின் முடிவையும் பார்த்தான்.

பிரியமான வாலிபர்களே, ஆண்டவருடைய வார்த்தையாக சத்திய வசனத்தை நாம் எந்த அளவு நம்புகின்றோம். அதனை நாம் நம்பும்பட்சத்தில் ஒவ்வொரு நாளையும் விசுவாசத்துடனும், தைரியத்துடனும், ஞானமான எந்தவித பயமின்றி எதிர்கொள்ள முடியும்.

**ரோமர் 4:20–21** ''தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனைமகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்."

**சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்**

1. A. ஹானா ஜோதி – மதுரை
2. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
3. M. ராஜா – கரூர்
4. M. ஜோனா – கரூர்
5. K. பெட்டி பேபி – மதுரை
6. K. கெட்ஸி நேசம் – மதுரை
7. K. பிளஸ்ஸி தேவகிருபை – மதுரை
8. S. கனிஸ்கா – கரூர்
9. S. லக்ஷிதா – கரூர்
10. M. செந்தில் – கரூர்


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : 92 4421 4421 & 92 4431 4431) **Nambikai TV :** Every Sunday 3.30 p.m.

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana TV :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# திரளான மீன்களை பிடித்தல்



கடவுளுக்கு பிரியமான சிறுப்பிள்ளைகளே, நீங்கள் எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

ஆண்டவர் இயேசு, பேதுரு அண்ணாவை திறளான மீன்களை பிடிக்கச்செய்த அற்புதத்தை பற்றி கற்றுக்கொள்வோமா?

ஒரு முறை பேதுரு அண்ணா, கெனசரேத் கடலில் தன் கூட்டாளிகளுடன் மீன் பிடிக்க சென்றார். இரவு முழுவதும் முயற்சித்தும் ஒரு மீன் கூட அகப்படாமல் சோர்ந்துபோய் கரைக்கு வந்து வலையை அலசிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆண்டவர் இயேசு, அந்த கடற்கரை அருகில் வந்துக்கொண்டிருந்தார். திரளான ஜனங்கள் வசனம் கேட்பதற்காக ஆண்டவரை நெருங்கினார்கள்.



அப்பொழுது ஆண்டவர், இரண்டு படகுகளில் ஒன்றில் ஏறினார். அது நம்ம பேதுருவின் படகாக இருந்தது. இயேசு அந்த படகில் இருந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணினார்.

ஜனங்கள் எல்லாரும் வசனத்தை கேட்டபிறகு இயேசு கப்பலை கடலின் ஆழத்தில் கொண்டுபோய் வலையை போடும்படி சொன்னார். அப்பொழுது பேதுரு இரவு முழுவதும் முயற்சி செய்து ஒரு மீன் கூட கிடைக்கவில்லை. ஆனாலும் நீங்கள் சொன்ன வார்த்தையை விசுவாசித்து வலையை போடுகிறேன் என்றான். அதன் விளைவு என்ன தெரியுமா! வலையே கிழிந்துப்போகத்தக்க திரளான மீன்கள் கிடைத்தது. பின்பு பேதுரு அண்ணன் என்ன சொன்னாங்க தெரியுமா? நான் பாவியான மனுஷன் என்னை விட்டுபோயிடுங்க ஆண்டவரே என்றான்.

அதற்கு ஆண்டவர் இயேசு, நீ எல்லாவற்றையும் விட்டுவிட்டு என் பின்னே வா உன்னை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். பேதுரு அண்ணன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவின் பின்னே சென்றான்.

பாருங்க பிள்ளைகளா! ஊழியத்திற்காக வேலையைக்கூட விட்டுவிட்டு இயேசுவுக்குப் பின்னே பேதுரு அண்ணன் சென்றார். தேவனுக்கு பிரியமான பிள்ளைகளா? பேதுரு அண்ணனை போல நீங்களும், ஆண்டவருக்கு, அப்பா, அம்மாவுக்கு, ஊழியர்களுக்கு பெரியவர்களுக்கு கீழ்படிவீர்களா! பேதுரு அண்ணன், ஆண்டவர் இயேசு வசனம் சொல்ல படகை கொடுத்ததுப்போல நீங்களும் உங்கள் வீட்டை வசனம் சொல்ல இயேசுவுக்காக திறந்துக்கொடுப்பீர்களா. சபையில் உங்களுக்கும் சின்ன சின்ன ஊழியப் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருந்தால், அதை செய்ய உங்கள் ஆசை, விளையாட்டு, பொழுது போக்கு இவைகளையெல்லாம் இயேசுவுக்காக தியாகம் பண்ணுவீர்களா! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: எபிரேயர் 5:8**

"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு."

இப்படிக்கு உங்கள் அண்ணன்

– அன்பு ஏசுதாஸ்

# அசுத்த ஆவியை துரத்துதல்




ஹாய் குட்டீஸ், உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இயேசு இந்த உலகத்தில் ஊழியஞ்செய்கையில் ஜனங்களிடத்தில் வந்தார். அப்பொழுது ஒரு மனுஷன் அவர் முன்பாக வந்தான். அவனுடைய வேண்டுதல் என்ன? இயேசு அதை நிறைவேற்றினாரா? என்பதை தெரிந்துக்கொள்வோம்.

இயேசு தம் சீடர்களாகிய பேதுரு, யாக்கோபு யோவான் ஆகிய மூவரையும் அழைத்து கொண்டு, ஒரு உயர்ந்த மலையின்மேல் போய் மறுரூபமானவர். அவர் ஜனங்களிடத்தில் வந்தபோது, ஒரு மனுஷன் அவரிடத்தில் வந்து முழங்கால்படியாட்டு : ஆண்டவரே ! என் மகனுக்கு இரங்கும். அவனை ஊமையான ஒரு ஆவி பிடித்திருக்கிறது. அது அவனை பிடிக்கும் போதெல்லாம் கொடிய வேதனைப்படுகிறான், அந்த ஆவி அவனை எங்கே பிடித்தாலும் அவனை அலைக்கழிக்கிறது. அப்பொழுது அவன் நுரைதள்ள, பல்லைக் கடித்து சோர்ந்து போகிறான். அடிக்கடி தீயிலும் அடிக்கடி தண்ணீரிலும் விழுகிறான். அவன் எனக்கு ஒரே மகன் என்றான். மேலும் அந்த மனுஷன்

இயேசுவை நோக்கி: அவனை சுகமாக்கும்படி உம்முடைய சீடர்களிடத்தில் கொண்டு வந்தேன். அவர்களால் அவனை குணப்படுத்த முடியவில்லை என்றார்.

இதை கேட்ட இயேசு: அவனை தன்னிடத்தில் கொண்டு வரச் சொன்னார். அவரைக் கண்டவுடனே



அந்த ஆவி அவனை அலைக்கழித்து தரையிலே தள்ளிற்று. இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாகிற்று என்று கேட்டார். அவன் சிறுவயது முதற்கொண்டு இருக்கிறது. நீர் ஏதாகிலும் செய்யகூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, உதவி செய்யும் என்று அவன் தகப்பன் இயேசுவை வேண்டினான். நீ விசுவாசித்தால் கண்டிப்பாக அது நடக்கும் என்று இயேசு கூறினார். அவன் விசுவாசிக்கிறேன் ஆண்டவரே என்றான். இயேசு அந்த அசுத்த ஆவியை அதட்டினார். அது அவனை விட்டு புறப்பட்டு போனது. அந்நேரமே அவன் சுகம் பெற்றான்.

குட்டீஸ், நாமும் அந்த சுகத்தை பெற்றுக் கொண்டவனுடைய தகப்பனை போல் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால், நாம் ஜெபிக்கின்ற ஜெபங்களை கேட்கின்ற பரலோக பிதா, அவருடைய சித்தத்தின்படி நமக்கு தந்தருளுவார்.

**மனப்பாட வசனம் : மத்தேயு 21:22** "மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்."

**— குயினி பிரதீப்**

# 5 அப்பம் 2 மீன்

**சிறுவர் பகுதி**

அன்பான மழலை செல்லங்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நமது ஆண்டவர் இயேசு 5 மீன் 2 அப்பங்களை ஐந்தாயிரத்திற்கும் அதிகமான பேருக்கு பகிர்ந்தளித்த அற்புதத்தை குறித்து படிப்போமா?

ஆண்டவர் இயேசு இந்த உலகத்தில் இருந்த நாட்களில் மக்கள் அனைவருக்கும் இந்த பூமியில் கடவுளுக்கு பிரியமாக வாழ்வதை பற்றி தெளிவாக எப்பொழுதும் போதித்தார். ஆகையால் மக்கள் மணிக் கணக்காகவும், நாட்கள் கணக்காகவும் அவரிடத்திலிருந்து, வாழ்வின் நற்போதனைகளை கேட்டனர்.

அப்படி ஒரு முறை தன்னிடத்தில் வந்த மக்களுக்கு போதனை செய்துக்கொண்டிருந்தார். அந்த போதனையை கேட்ட பெண்கள் சிறுவர்கள் கணக்கில்லாமல், ஆண்கள் கூட்டம் மாத்திரம் ஐந்தாயிரத்திற்கும் அதிகமான பேர். மொத்தம் ஒரு இருபதாயிரத்திற்கும் அதிகமான பேர் இருந்திருக்கலாம் என்று வேதாகம வல்லுனர்களால் சொல்லப்படுகின்றது.

அப்படி ஆண்டவருடைய வார்த்தையை கேட்ட மக்கள், நெடு நேரம் கேட்டுக்கொண்டிருந்தனர். அது ஒரு வனாந்திரமான இடம். மக்கள் தங்கள் கிராமங்களுக்கு போவதற்குள் சோர்ந்து போவார்கள் என்பதால், ஆண்டவர் அவர்களுக்கு உணவளிக்க விரும்பினார். அதை தனது அப்போஸ்தலர்களிடம் சொன்னார்.

அப்போஸ்தலனாகிய பிலிப்போ இவர்கள் அனைவருக்கும் உணவு வாங்க 200 பணத்துக்கும் அதிகமாகுமே என்றான். மற்றொரு அப்போஸ்தலனாகியஅந்திரேயாவோ, இங்கே ஒரு சிறுவனிடத்தில் 5 அப்பம் 2 மீன்கள் தான் இருக்கிறது இது எப்படி பத்தும் என்றான்.



ஆண்டவரோ, அவர்களை நோக்கி மக்களை உட்கார வையுங்கள் என்றார். மேலும் அந்த 5 அப்பம் மற்றும் 2 மீன்களை தோத்திரம் செய்து அவர்களிடத்தில் கொடுத்து ஜனங்களுக்கு பரிமாற சொன்னார். என்ன ஆச்சரியம்? அது அங்கே இருந்த ஜனங்கள் அனைவரும் திருப்தியாக சாப்பிட போதுமானதாக மட்டுமின்றி, 12 கூடைகள் நிரம்ப மீதமும் இருந்தது.

செல்லங்களா கவனித்தீர்களா? அந்த சிறுவன் தன்னிடம் உள்ளதை கொடுத்தான். ஆண்டவர் அதை அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற்றினார். நாமும் நம்மிடம் உள்ளதை ஆண்டவருக்காக கொடுக்கும் போது, அது நேரமோ, பொருளோ, திறமையோ எதுவாயினும், ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பது மாத்திரமல்ல, நம்மை அநேகருக்கு ஆசீர்வாதமாக்குவார். நாம் செய்வோமா?

**மனப்பாட வசனம் : லூக்கா 6:38** "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்."

**— பிரியா ஆண்டனி**

# ஓர் ஆண்டிற்குள் முழு வேதாகமத்தை படிக்க அட்டவணை

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| ஜுலை 1 | சங்கீதம் 82-83 |
| ஜுலை 2 | சங்கீதம் 84-86 |
| ஜுலை 3 | சங்கீதம் 87-89 |
| ஜுலை 4 | சங்கீதம் 90-91 |
| ஜுலை 5 | சங்கீதம் 92-94 |
| ஜுலை 6 | சங்கீதம் 95-98 |
| ஜுலை 7 | சங்கீதம் 99-101 |
| ஜுலை 8 | சங்கீதம் 102-103 |
| ஜுலை 9 | சங்கீதம் 104-105 |
| ஜுலை 10 | சங்கீதம் 106-107 |
| ஜுலை 11 | சங்கீதம் 108-109 |
| ஜுலை 12 | சங்கீதம் 110-111 |
| ஜுலை 13 | சங்கீதம் 112-113 |
| ஜுலை 14 | சங்கீதம் 114-117 |
| ஜுலை 15 | சங்கீதம் 118:1-119:24 |
| ஜுலை 16 | சங்கீதம் 119:25-119:96 |
| ஜுலை 17 | சங்கீதம் 119:97-119:176 |
| ஜுலை 18 | சங்கீதம் 120-124 |
| ஜுலை 19 | சங்கீதம் 125-131 |
| ஜுலை 20 | சங்கீதம் 132-134 |
| ஜுலை 21 | சங்கீதம் 135-137 |
| ஜுலை 22 | சங்கீதம் 138-140 |
| ஜுலை 23 | சங்கீதம் 141-144 |
| ஜுலை 24 | சங்கீதம் 145-150 |
| ஜுலை 25 | நீதிமொழிகள் 1:1-2:9 |
| ஜுலை 26 | நீதிமொழிகள் 2:10-5:14 |
| ஜுலை 27 | நீதிமொழிகள் 5:15-8:11 |
| ஜுலை 28 | நீதிமொழிகள் 8:12-11:11 |
| ஜுலை 29 | நீதிமொழிகள் 11:12-13:25 |
| ஜுலை 30 | நீதிமொழிகள் 14-16 |
| ஜுலை 31 | நீதிமொழிகள் 17-20 |
| ஆகஸ்ட் 1 | நீதிமொழிகள் 21-23 |
| ஆகஸ்ட் 2 | நீதிமொழிகள் 24:1-27:10 |
| ஆகஸ்ட் 3 | பிரசங்கி 1-5 |
| ஆகஸ்ட் 4 | பிரசங்கி 6-12 |
| ஆகஸ்ட் 5 | நீதிமொழிகள் 27:11-31:31 |
| ஆகஸ்ட் 6 | உன்னத பாட்டு 1-8 |

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| ஆகஸ்ட் 7 | ஏசாயா 1:1-3:15 |
| ஆகஸ்ட் 8 | ஏசாயா 3:16-5:17 |
| ஆகஸ்ட் 9 | ஏசாயா 5:18-9:12 |
| ஆகஸ்ட் 10 | ஏசாயா 9:13-13:16 |
| ஆகஸ்ட் 11 | ஏசாயா 13:17-19:10 |
| ஆகஸ்ட் 12 | ஏசாயா 19:11-24:6 |
| ஆகஸ்ட் 13 | ஏசாயா 24:7-28:22 |
| ஆகஸ்ட் 14 | ஏசாயா 28:23-32:20 |
| ஆகஸ்ட் 15 | ஏசாயா 33:1-37:29 |
| ஆகஸ்ட் 16 | ஏசாயா 37:30-40:31 |
| ஆகஸ்ட் 17 | ஏசாயா 41-44 |
| ஆகஸ்ட் 18 | ஏசாயா 45-49 |
| ஆகஸ்ட் 19 | ஏசாயா 50-54 |
| ஆகஸ்ட் 20 | ஏசாயா 55:1-60:9 |
| ஆகஸ்ட் 21 | ஏசாயா 60:10-66:24 |
| ஆகஸ்ட் 22 | எரேமியா 1:1-2:25 |
| ஆகஸ்ட் 23 | எரேமியா 5:20-8:22 |
| ஆகஸ்ட் 24 | எரேமியா 5:20-8:22 |
| ஆகஸ்ட் 25 | எரேமியா 55:1-60:9 |
| ஆகஸ்ட் 26 | எரோமியா 13:1-16:9 |
| ஆகஸ்ட் 27 | எரேமியா 16:10-20:18 |
| ஆகஸ்ட் 28 | எரேமியா 21-24 |
| ஆகஸ்ட் 29 | எரேமியா 25-27 |
| ஆகஸ்ட் 30 | எரேமியா 28:1-31:20 |
| ஆகஸ்ட் 31 | எரேமியா 31:21-33:26 |
| ஆகஸ்ட் 28 | எரேமியா 21-24 |
| ஆகஸ்ட் 29 | எரேமியா 25-27 |
| ஆகஸ்ட் 30 | எரேமியா 28:1-31:20 |
| ஆகஸ்ட் 31 | எரேமியா 31-21-33:26 |
| செப்டம்பர் 1 | எரேமியா 34-36 |
| செப்டம்பர் 2 | எரேமியா 37:1-41:10 |
| செப்டம்பர் 3 | எரேமியா 41:11-45:10 |
| செப்டம்பர் 4 | எரேமியா 46-48 |
| செப்டம்பர் 5 | எரேமியா 49:1-50:46 |
| செப்டம்பர் 6 | எரேமியா 51:1-52:34 |
| செப்டம்பர் 7 | புலம்பல் 1-5 |
| செப்டம்பர் 8 | எசேக்கியேல் 1-2 |

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| செப்டம்பர் 9 | எசேக்கியேல் 3-8 |
| செப்டம்பர் 10 | எசேக்கியேல் 9-12 |
| செப்டம்பர் 11 | எசேக்கியேல் 13:1-16:43 |
| செப்டம்பர் 12 | எசேக்கியேல் 16:44-20:17 |
| செப்டம்பர் 13 | எசேக்கியேல் 20:18-22:12 |
| செப்டம்பர் 14 | எசேக்கியேல் 22:13-24:27 |
| செப்டம்பர் 15 | எசேக்கியேல் 25:1-28:10 |
| செப்டம்பர் 16 | எசேக்கியேல் 28:11-31:18 |
| செப்டம்பர் 17 | எசேக்கியேல் 32:1-34:24 |
| செப்டம்பர் 18 | எசேக்கியேல் 34:25-38:9 |
| செப்டம்பர் 19 | எசேக்கியேல் 38:10-40:49 |
| செப்டம்பர் 20 | எசேக்கியேல் 41-43 |
| செப்டம்பர் 21 | எசேக்கியேல் 44-48 |
| செப்டம்பர் 22 | தானியேல் 1:1-2:30 |
| செப்டம்பர் 23 | தானியேல் 2:31-4:27 |
| செப்டம்பர் 24 | தானியேல் 4:28-7:12 |
| செப்டம்பர் 25 | தானியேல் 7:13-12:13 |
| செப்டம்பர் 26 | ஓசியா 1-3 |
| செப்டம்பர் 27 | ஓசியா 4-9 |
| செப்டம்பர் 28 | ஓசியா 10-14 |
| செப்டம்பர் 29 | ஜோயல் 1:1-3:21: ஆமோஸ் 1-4 |
| செப்டம்பர் 30 | ஆமோஸ் 5-9: ஒபதியா |

– தொடரும்...

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-

G-Pay No. 92 4421 4421

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSE Code : SBIN0070704
Branch : SBI - Ponmeni, Madurai.

# Form IV

## Statement about ownership and other particulars about Newspaper

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Madurai |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printers Name | : | N. Jayakarthikeyan |
| Nationality | : | Indian |
| Address | : | Thee Classic Printers, 27, Kakathope Street, Madurai - 625 001 |
| 4. Publisher's Name | : | P.C. Philemon Rajah |
| Nationality | : | Indian |
| Address | : | 45 C/1, Church Lane, Coronation St., Arasaradi, Madurai - 625 016 |
| 5. Editor's Name | : | P.C. Philemon Rajah |

I, P.C. Philemon Rajah, hereby declare that the particular given above are true to the best of my knowledge and belief.

P.C. Philemon Rajah
Publisher & Editor

Date : 09-03-2021

## மார்ச் மாத கேள்விகள்

1. 'எண்ணிமுடியாத அதிசயங்களை செய்கிறவர்' யார்?

2. 'கிரகிக்ககூடாத பெரிய காரியங்களை செய்கிறவர்' யார்?

3. 'உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?' என வாசிப்பதெங்கே?

4. ஆண்டவர் இயேசு, யாரை பிதாவின் முன்பாக அறிக்கை செய்வேன் என்றார்?

5. 'தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராருக்கிற மரத்தைப் போலிருப்பான்' அவன் யார்?

6. தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று விசுவாசத்தில் வல்லவனானது யார்?

7. 'நீ சமாதானத்தோடேபோய், உன் தேவனை நீங்கி, சுகமாயிரு' யார் யாரிடம் சொன்னது?

8. மறைவானவைகள் தேவனுக்கும், வெளிப்படுத்தபட்டவைகள் யாருக்கும் உரியவைகள்?

9. பவுல், யார் எதினால் போக்குச்சொல்ல இடமில்லை என்றார்

10. இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத, இயேசு செய்த வேறு அநேக காரியங்ள் என்ன?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-04-2021**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. மத் 13:35 | 6. 1 பேதுரு 5:8,9 |
| 2. சங் 78:2 | 7. யாக் 4:7 |
| 3. 1 யோவா 5:13 | 8. 1கொரி 4:6 |
| 4. மத் 11:30 | 9. மத் 7:6 |
| 5. எபி 1:2 | 10. லூக் 18:7 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. G.J. அப்பாதுரை – நெல்லை
2. J. ஜான்சி – ஆனைமலை
3. Mrs. லீலா ஜோசப் – கோவை
4. J. ரேவதி ஜெயசந்திரன் – கரிமேடு
5. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் – நெல்லை
6. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
7. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
8. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
9. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
10. S. சூசைமரியன் – சென்னை
11. V. விக்னேஷ் – மூலனூர்
12. Mrs. M. ஜெனி – கரூர்
13. Mrs. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
14. D. வர்ஷினி – மூலனூர்
15. P. பரமேஸ்வரி – மூலனூர்
16. D. மீனாள் – மூலனூர்
17. J.V. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
18. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
19. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
20. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
21. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
22. Mrs. ஜெயமணி ராஜாம்மாள் – கடலூர்
23. S. அன்னதாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
24. S. அசோக் பிரின்ஸ் – தூத்துக்குடி
25. Mrs. ஹெலன் திலக் – மதுரை
26. Mrs. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
27. Mr. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
28. Mrs. செல்வமணி – சேலம்
29. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
30. Mrs. ஞான சிரோன்மணி – மதுரை
31. S. பாக்கியராஜம் – மதுரை
32. Mrs. குளோரி திலகவதி – சென்னை
33. Mrs. மேரி ராஜ் – மதுரை
34. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
35. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
36. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
37. S. டேவிட் சாந்தகுமார் – தென்காசி
38. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
39. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
40. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
41. Mrs. ஹெப்ஸிமா தாமஸ் – படப்பை
42. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
43. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
44. D. அலெக்சாண்டர் சாமுவேல் – சென்னை
45. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
46. P. சூரிய பிரியா – திருமங்கலம்
47. J. விஜய் – மதுரை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Place of Publication : Arasaradi, Madurai
Printer's Name : N. JAYAKARTHIKEYAN
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th March 2021
Posted at Arasaradi HPO on 10th 11th March 2021

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு

### கிருபையின் கீதங்கள்




பாடல் புத்தகம்

421 பக்கங்கள்

514 தமிழ் பாடல்கள்

29 ஆங்கில பாடல்கள்

100 சிறுவர் பாடல்களுடன்

விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431







WORLD VEDIO BIBLE SCHOOL
ENGLISH BOOKS
NOW AVAILABLE IN INDIA

INTERNATIONAL EDITION - "USA PRINTING"

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers